தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

அரையாண்டுத் தேர்வு

2014 - 2015

தமிழ்மொழி

வளர் தமிழ் 8

சுட்டெண்:.. நேரம்: 180 மணித்துளிகள்

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழின் இளமை கருதி அதனை இவ்வாறு அழைப்பர்

அ) தேன்தமிழ் ஆ) பைந்தமிழ்
இ) செந்தமிழ் ஈ) தீந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. குண்டலகேசி என்ற காப்பியத்தை எழுதியவர்

அ) நாதகுத்தனார் ஆ) இளங்கோவடிகள்
இ) சீர்த்தலைச்சாத்தனார் ஈ) திருத்தக்க தேவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. யாதும் ஊரே யாவரும்

அ) கேழிர் ஆ) கேளிர்
இ) கேழீர் ஈ) கேளீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பவளவிழா ஆ) பொன்விழா
இ) வெள்ளிவிழா ஈ) வைரவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இனிய பழத்தை எடுத்து உண்டான். இதில் மறைந்திருக்கும் சொல்லிய உறுப்பு

அ) எழுவாய் ஆ) அடைமொழி
இ) பயனிலை ஈ) செயப்படுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 12 ஆ) 18 இ) 216 ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

7. தமிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய மன்னர்களில் ஒருவர்

அ) பண்டாரவன்னியன் ஆ) சங்கிலியன்
இ) கயிலைவன்னியன் ஈ) வீரபாண்டிய கட்டப் பொம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பல+நூறு என்பதைப் புணர்த்தினால்

அ) பலநூறு ஆ) பலனூறு
இ) பன்னூறு ஈ) பன்நூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. காட்டு மல்லிகை என்ற பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ஆ) பாவேந்தர்
இ) பாரதியார் ஈ) உருத்திர மூர்த்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பாடினான் என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) பாடு ஆ) ன் இ) இன் ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. அதியர்மான் அரண்மனைக்கு வந்தவுடன் அழைத்தது

அ) தொண்டைமானை ஆ) ஔவையாரை
இ) துறவியை ஈ) மக்களை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. வாய்மை என்ற சொல் குறித்து நிற்பது

அ) உண்மையை ஆ) பொய்மையை
இ) கயமையை ஈ) இனிமையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

13. காளமேகப்புலவரின் இயற்பெயர்

அ) சுப்புரத்தினம் ஆ) வரதன்

இ) சேவியர் ஈ) மயில்வாகனன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. விளிவேற்றுமை என அழைக்கப்படுவது

அ) நான்காம் வேற்றுமை ஆ) ஐந்தாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) இரண்டாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கதிரவன் காலிக்கும் திசை

அ) கிழக்கு ஆ) வடக்கு இ) மேற்கு ஈ) தெற்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. கரடி உறுமும் அதுபோல் யானை

அ) முழங்கும் ஆ) பிளிறும் இ) உறுமும் ஈ) ஊளையிடும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. தமிழில் எழுந்த முதற் காப்பியம்

அ) மணிமேகலை ஆ) சீவகசிந்தாமணி

இ) வளையாபதி ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பண்டாரவன்னியனை நினைவுபடுத்தும் கல்வெட்டு அமைந்துள்ள இடம்

அ) உடையாவூர் ஆ) முல்லைத்தீவு

இ) கற்சிலைமடு ஈ) பனங்காமம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவை

19. உழவர் வயலை உழுது பயிர் செய்தனர். இச் சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ஆ) கூட்டுச்சொல்லியம்
இ) கலப்புச்சொல்லியம் ஈ) வினாச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. மகாகவி உருத்திரமூர்த்தியைக் கவர்ந்த அழகான மலர்

அ) முல்லை ஆ) தாமரை
இ) காட்டுமல்லிகை ஈ) செவ்வந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சிறுவர்கள் விளையாட்டுத்திடலில் ஓடி ஆடி விளையாடுகின்றனர். இச் சொல்லியத்தில் விளையாடுகின்றனர் என்பது

அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலர்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நான் + அது என்பதைப் புணர்த்தினால்

அ) எனது ஆ) உனது இ) தனது ஈ) எங்களது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் எதிர்த்துப் போராடிய மன்னன்

அ) கயிலை வன்னியன் ஆ) பண்டாரவன்னியன்
இ) எல்லாளன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. வைணவ நெறி இலக்கியங்களில் ஒன்று

அ) திருவாசகம் ஆ) திவ்வியப்பிரபந்தம்
இ) இயேசுகாவியம் ஈ) சீறாப்புராணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

25. உலகெல்லாம் பரந்து வாழும் தமிழர்களாகிய நாம் எமது தாயகத்திற்கு உதவுவோம். இங்கு வந்துள்ள வேற்றுமை உருவு

அ) ஐ ஆ) கு இ) ஆல் ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தேடினாள் என்ற வினைச்சொல்லின் வினையடி

அ) தேடி ஆ) தேடு இ) தேடிய ஈ) தேடும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை எழுதியவர்

அ) பாவேந்தர் ஆ) ஔவையார்
இ) அகத்தியர் ஈ) தொல்காப்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. புலவர் மன்னனை வாழ்த்திப் பாட்டுப் பாடினார். இதில் வரும் செயப்படுபொருள்

அ) மன்னன் ஆ) புலவர்
இ) பாட்டு ஈ) பாடினார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்த மன்னன்

அ) பாரி ஆ) அதியர்மான்
இ) இராவணன் ஈ) பேகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30.காளமேகப் புலவர் ____________________ நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

அ) பதின்மூன்றாம் ஆ) பதினைந்தாம்
இ) பன்னிரண்டாம் ஈ) பத்தாம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

தமிழ்க் கல்வி மேம்பாட்டுப் பேரவை

2 . பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி என்பவை ஐம்பெருங்காப்பியங்களாகும். சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. சிலப்பதிகாரம் திருவள்ளுவருக்குப் பின் 2 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. சீவகசிந்தாமணி தி.பி 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. எனவே இக்காப்பியங்கள் பல நூற்றாண்டுகால இடைவெளிகளில் எழுதப்பட்டவை. இக்காப்பியங்களை எழுதிய புலவோர் இவை ஐந்தின் பெயர்களுக்கும் ஒரு தொடர்பினை ஏற்படுத்தியுள்ளனர். அதாவது ஐந்தின் பெயர்களும் ஒரு பெண் அணியும் அணிகலன்களின் பெயர்களைக் கொண்டுள்ளன. தமிழ்த்தாயை இவ்வணிகள் அழகுபடுத்துகின்றன. சிலம்பு பெண்கள் காலில் அணியும் தண்டை எனப்படும் சதங்கை. மேகலை மங்கையர் இடையில் அணியும் இடைநாண். வளை கையில் அணியும் வளையல். குண்டலம் காதில் அணியும் காதணி. சிந்தாமணி என்பது மணிமாலை. இது ஒன்பான் மணிகளால் ஆன மாலையாகும். வெவ்வேறு கால இடைவெளியில் இப்புலவோர் வாழ்ந்திருந்தும் பெண்கள் அணியும் அணிகலன்களின் பெயர்களை ஐம்பெருங்காப்பியங்களுக்குச் சூட்டியுள்ளமை வியக்கத்தக்கதொன்றாகும்.

1. சீவகசிந்தாமணி எத்தனையாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது?

____

____

2. ஐம்பெருங்காப்பியங்களும் எவை?

____

____

3. மங்கையர் இடையில் அணியும் அணிகலன் எது?

____

____

4. எப்பெயர்களை ஐம்பெருங்காப்பியங்களுக்குச் சூட்டியுள்ளமை வியக்கத்தக்கதொன்றாகும்?

____

____

5. இளங்கோ அடிகளால் எழுதப்பட்ட காப்பியத்தின் பெயர் என்ன ?

____

____

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. கிறித்தவநெறி சார்ந்த இலக்கியங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. முல்லைத்தீவில் ஆங்கிலேயரின் மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றிய தமிழ் மன்னன் யார்?

3. காட்டுமல்லிகை என்ற பாடத்தில் கார்காலத்தில் மலர்ந்ததாகக் கூறப்படும் மலர்களின் பெயர்கள் இரண்டினைத் தருக.

4. ''வலம்படு வாய்வாள்'' எனத்தொடங்கும் பாடல் எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

5. காளமேகப் புலவர் எவ்வூரைச் சேர்ந்தவர்?

6. தொல்காப்பியத்தை எவ்வாறு கூறிப் பாராட்டுவர்?

7. போர்த்துக்கேயரினால் வெற்றிலைக் கேணியில் அமைக்கப்பட்ட கோட்டையின் பெயர் என்ன?

புள்ளிகள் 10

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.

விருந்தோம்பல்

கூறி	பண்பாடு	விருந்தினரை	கூடி	உணவும்

வீட்டுக்கு வரும் ______________________

விரும்பி நாமும் வரவேற்போம்

வணக்கம் ______________________ அழைத்திடுவோம்

வந்தவர் நலங் கேட்டிடுவோம்

இன் முகம் மாறாமல் பேசிடுவோம்

இனிமையாகக் ______________________ மகிழ்ந்திடுவோம்

அன்பாய் நாமும் பரிமாறி அவர்களுக்கு

அறுசுவை ______________________ கொடுத்திடுவோம்

இது தமிழரின் சிறந்த______________________

இதை நாமும் நன்கு அறிந்திடுவோம்

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புள்ளிகள் 10

5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1) தரப்பட்டுள்ள சொற்களுடன் பின்வரும் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து எழுதுக.

	ஐ	ஆல்	கு
நான்			
பாவேந்தர்			

2) தனிச் சொல்லியம், கூட்டுச் சொல்லியம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எடுத்துக் காட்டுத் தருக.

தனிச் சொல்லியம் :- ______________________

____

கூட்டுச் சொல்லியம் :- ______________________

____

3) பின்வரும் மரபுச் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

ஏறி ஏறி ______________________

கடகட ______________________

4) செல்வான் என்ற வினைச் சொல்லின் பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.

பகுதி ______________________

இடைநிலை ______________________

விகுதி ______________________

5) ஐந்தாம் வேற்றுமை உருபுகள் எவை?
ஐந்தாம் வேற்றுமை உருபு இடம் பெறுமாறு ஒரு சொல்லியம் தருக.

____

____

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

6) **பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

நிலவன் கோடைகால விடுமுறைக்குத் தாயகம் சென்றான். அங்கு தனது உறவினரைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான். அவன் தமிழில் பேசுவதைக் கேட்டுத் தாத்தாவும் பாட்டியும் மகிழ்ந்தனர். நிலவன் அங்குள்ள இடங்களைச் சுற்றிப் பார்த்தான். அவனுக்குத் தாயகத்தை விட்டு வர மனமேயில்லை.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

புள்ளிகள் 05

7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

* தமிழ் இலக்கிய வளம் என்ற பாடத்திலிருந்து நீர் அறிந்து கொண்டவற்றைத் தொகுத்து எழுதுக.
* காட்டு மல்லிகை என்ற பாடலை உமது உரை நடையில் எழுதுக.
* கணினியின் பயன்பாடு.

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை